

சென்னையைத் தொடர்ந்து திருவள்ளூர் மாவட்டத்தில், 18 ஆயிரம் பட்டாக்கள் தயார் செய்யப்பட்டுள்ள நிலையில், அவற்றில் 1200 பட்டாக்களை நேற்று முன்தினம் ஆவடியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பொதுமக்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகளிடம் வழங்கினார். அமைச்சர்கள் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.இராமச்சந்திரன், ஆவடி சா.மு.நாசர் மற்றும் துறை செயலாளர் அமுதா உள்பட அரசு அதிகாரிகள், கழக நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

## மக்களைத் தேடி நிர்வாகம் என்ற

# உயர்ந்த லட்சியத்துடன் திராவிட மாடல் அரசு வெற்றி நடை போடுகிறது!

## ஆவடியில் 1,200 பயனாளிகளுக்கு வீட்டுமனை பட்டா வழங்கி – துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பெருமிதம்!

**திருவள்ளூர், அக். 11-**

**திருவள்ளூர் மாவட்டம், ஆவடி பட்டாபிராம், இந்து கல்லூரி வளாகத்தில் அரசு நலத்திட்ட உதவிகள் மற்றும் 1,200 பயனாளிகளுக்கு வீட்டுமனை பட்டா வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் கலந்துகொண்டு பயனாளிகளுக்கு வீட்டுமனை பட்டாக்களை வழங்கி, சிறப்புரையாற்றினார்.**

விழாவில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு:-

திருவள்ளூர் மாவட்டத்தைச் சேர்ந்த 1,200 பேர்களுக்கு வீட்டுமனை பட்டா வழங்குகின்ற நிகழ்ச்சியில் கலந்துகொண்டு உங்களையெல்லாம் சந்திப்பதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். பெருமை அடைகிறேன்.

### இரண்டு வாக்குறுதிகள்

சென்ற மக்களவைத் தேர்தலின்போது, நாடாளுமன்றத் தேர்தலின்போது நான் இங்கு பிரச்சாரத்தில் ஈடுபட்டபோது, திருவள்ளூர் தொகுதியில் நம் தி.மு.க. கூட்டணியை நீங்கள் வெற்றி பெற வைத்தீர்கள் என்றால், உங்களுக்கு நிறைவேற்றுவதற்காக இரண்டு வாக்குறுதிகள் கொடுத்து இருந்தேன்.

ஒன்று, அடிக்கடி திருவள்ளூர் மாவட்டத்திற்கு வந்து, உங்களைச் சந்திப்பதாக வாக்குறுதி கொடுத்து இருந்தேன். அதேபோல் இரண்டாவது வாக்குறுதியையும் நீங்கள் மறந்து இருக்க மாட்டீர்கள். ``பெல்ட் ஏரியாவில் இருக்கின்ற மக்கள், பல ஆண்டுகளாக வீட்டுமனை பட்டா இல்லாமல் இருக்கிறவர்களுக்கு வீட்டுமனை பட்டாவை வழங்குவோம்" என்ற வாக்குறுதியை முதலமைச்சர் அவர்களது உத்தரவின்பேரில் கொடுத்து இருந்தேன்.

நாங்கள் கேட்டுக்கொண்டபடி, நம் கூட்டணி வேட்பாளர் சகோதரர் சசிகாந்த் செந்தில் அவர்களை, கிட்டத்தட்ட 5 லட்சத்து 72 ஆயிரம் வாக்குகள் வித்தியாசத்தில், நீங்கள் வாக்களித்து வெற்றிப் பெற வைத்தீர்கள்.

### நிறைவேற்ற வேண்டிய நேரம்

எனக்குக் கொடுத்த வாக்குறுதியை நீங்கள் நிறைவேற்றி விட்டீர்கள். இப்போது நான் உங்களுக்குக் கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்ற வேண்டிய நேரம் வந்து இருக்கிறது. அந்த வகையில்தான், இன்று ஆவடிக்கு வந்து, நம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதல்படி, 1,200 பட்டாக்களை இந்த மேடையில் வழங்க இருக்கிறோம்.

பல்வேறு அரசுத் திட்டங்களின் கீழ் வருகின்ற பயனாளிகளுக்கு இந்தத் திருவள்ளூர் மாவட்டத்தில் மட்டும் 17 ஆயிரத்து 427 பட்டாக்கள் தயார் செய்யப்பட்டு இருக்கின்றன. முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் தலைமையிலான கழக அரசாக இருக்கட்டும், நம் முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களின் தலைமையிலான திராவிட மாடல் அரசாக இருக்கட்டும், ஏழை, எளிய, அடித்தட்டு மக்கள், நடுத்தர வர்க்க மக்களின் ஏற்றத்துக்காக பல்வேறு திட்டங்களைத் தினம்தோறும் செயல்படுத்திக்கொண்டு இருக்கிறார்.

### அடிப்படைத் தேவைகள்

உண்ண உணவு, உடுத்த உடை, இருக்க இடம் என்பது ஒவ்வொரு மனிதனுக்கும் அடிப்படை உரிமை. கலைஞர் அவர்களின் ஆட்சிக் காலத்தில் இருந்தே இந்த அடிப்படைத் தேவைகள் பார்த்து பார்த்து நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

குறிப்பாக, வீடு என்பது எல்லோருக்குமான ஒரு அத்தியாவசிய தேவை. வீடு என்பது ஒவ்வொருவரின் கனவு. அதற்காகத்தான் கலைஞர் அவர்கள், 1970களிலேயே தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தை இந்தியாவிலேயே முதன்முறையாக தொடங்கினார்கள். இன்றைக்கு அதனை தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் என, நம் தலைவர் அவர்கள் தரம் உயர்த்தி மேம்படுத்தி இருக்கிறார். அந்த வாரியத்தின் சார்பில், தொடர்ந்து அடுக்குமாடிக் குடியிருப்புகள் ஒதுக்கீடு செய்யப்பட்டு வருகின்றன.



> **நீங்கள் எல்லோரும் கழக அரசின் திட்டங்களின் பயனாளிகள் மட்டுமில்லை. இந்த அரசுத் திட்டங்களின் பங்கேற்பாளர்கள். திராவிட மாடல் அரசின் சாதனைத் திட்டங்களை எல்லாம் நீங்கள் 4 பேருக்கு, உங்கள் உற்றார் உறவினர்களுக்கு, நண்பர்களுக்கு எடுத்துச் சொல்ல வேண்டும். இந்த அரசின் பிராண்ட் அம்பாசிடர்களாக நீங்கள் அத்தனைப்பேரும் இருக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.**

தமிழ்நாட்டிலேயே முதன்முறையாகக் கட்டட அனுமதியை பெறுவதற்கு, ஆன்லைன் மூலம் உடனடியாக வழங்குகின்ற திட்டத்தையும் தொடங்கி வைத்தார். வீடு எவ்வளவு முக்கியமோ, அதே அளவு, அந்த வீட்டுக்கான பட்டாவும் மிக மிக முக்கியம். அந்த வகையில், பார்த்தால், உங்கள் ஒவ்வொருவருக்கும் மறக்க முடியாத இந்த நாள் மிக மிக முக்கியமான நாள். பட்டா வேண்டும் என்ற உங்களின் பல வருட கனவு இன்றைக்கு நனவாகி இருக்கிறது.

### நடைமுறைச் சிக்கல்கள்

பட்டா கொடுப்பதில் இருந்த பல்வேறு நடைமுறைச் சிக்கல்கள் அனைத்தையும் நம் முதலமைச்சர் அவர்களின் கவனத்துக்கு எடுத்துச் சென்றோம். அப்போது, நம் முதலமைச்சர் அவர்கள் சொன்ன வார்த்தை "எத்தனை சிக்கல்கள் இருந்தாலும், மக்களோட மகிழ்ச்சி மட்டும்தான் மிகமிக முக்கியம். பட்டா, நம் மக்களோட உரிமை"னு சொல்லி, இந்தச் சிக்கல்களைத் தீர்க்க, நம் முதலமைச்சர் அவர்கள், ஒரு குழுவை நியமித்தார்.

அந்தக் குழுவில் நான் மற்றும் நம் வருவாய்த்துறை அமைச்சர், உட்பட பல்வேறு அமைச்சர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லோரும் அந்தக் குழுவில் பங்கேற்றோம். அந்தக் குழுவின் சார்பாக, ஆய்வுகளைச் செய்தோம். எந்தப் பகுதியில் என்ன சிக்கல் இருக்கிறது, அதை எப்படித் தீர்க்க வேண்டும் என்று பரிந்துரைகளைத் தயார் செய்து சம்பந்தப்பட்ட துறைத் தலைவர்கள், மாவட்ட ஆட்சியர்கள் இடத்தில் அளித்தோம்.

இங்கே மட்டுமில்லை, சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில், 36 ஆயிரம் பட்டாக்கள் தயார் செய்யப்பட்டு, இதுவரைக்கும் 20 ஆயிரம் பட்டாக்களைப் பயனாளிகளிடம் என் கைகளாலேயே வழங்கி இருக்கேன். நம் திராவிட மாடல் அரசின் முயற்சியால் இன்றைக்கு உங்கள் ஒவ்வொருவர் கையிலும் வீட்டுமனைக்கான பட்டாக்கள் இருக்கின்றன. இந்தப் பட்டாக்களை எல்லாம் நீங்கள் பத்திரமாக வைத்துக் கொள்ளுங்கள்.

### திராவிட மாடல் அரசு

நம் திராவிட மாடல் அரசு இன்றைக்கு எண்ணற்றத் திட்டங்களை செயல்படுத்திக் கொண்டு இருக்கிறது. முக்கியமான திட்டங்களை மட்டும், இங்கு நினைவுகூற விரும்புகிறேன். மகளிருக்குக் கட்டணமில்லாப் பேருந்து பயணத் திட்டம், முதலமைச்சரின் விடியல் பயணத் திட்டம். இந்தத் திட்டத்தின் மூலமாக இதுவரை 520 கோடிப் பயணங்களை மகளிர் மேற்கொண்டு இருக்கிறீர்கள். இதனால், ஒவ்வொரு மகளிரும் மாதந்தோறும் 900 ரூபாய் சேமிக்கிறீர்கள்.

மகளிரின் சுமையைக் குறைக்கின்றவகையில், முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தை நம் முதலமைச்சர் அவர்கள் அறிமுகம் செய்தார். இதன் மூலமாக இன்றைக்கு ஒவ்வொரு நாளும் திங்கள் முதல் வெள்ளி வரை 20 லட்சம் மாணவர்களுக்குப் பள்ளிகளிலேயே காலை உணவு வழங்கப்படுகிறது.

### கல்வி ஊக்கத்தொகை

புதுமைப்பெண் திட்டம் மூலமாக அரசுப் பள்ளியில் படித்து உயர்கல்வி படிக்கின்ற 3 லட்சத்து 25 ஆயிரம் மாணவிகளுக்கு மாதம் ஆயிரம் ரூபாய் கல்வி ஊக்கத்தொகை வழங்கப்படுகிறது.

அடுத்து, அதேபோல் `தமிழ்ப்புதல்வன் திட்டம்' மூலம் அரசுப் பள்ளிகளில் படித்து உயர்கல்வி சேர்கின்ற 3 லட்சத்துக்கும் அதிகமான மாணவர்களுக்கு, மாதம் 1,000 ரூபாய் கல்வி ஊக்கத்தொகை வழங்கப்படுகிறது.

இவை எல்லாவற்றையும் விட, முக்கியமான திட்டம் கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டம். இந்தத் திட்டம், பெண்கள் மத்தியில் மிகப்பெரிய வரவேற்பைப் பெற்று இருக்கிறது. கடந்த ஆண்டு, செப்டம்பர் மாதம் தொடங்கிய திட்டம் ஒரு கோடியே 16 லட்சம் மகளிருக்கு மாதந்தோறும் ஆயிரம் ரூபாய் மகளிர் உரிமைத் தொகையாக வழங்கப்பட்டு இருக்கிறது.

அந்தத் திட்டத்தில் சில குறைகளும் இருக்கின்றன. நிச்சயமாக உங்களின் கோரிக்கைகளை முதலமைச்சருக்குக் கொண்டு சேர்த்து, விரைவில் தகுதியுள்ள அனைவருக்கும் கலைஞர் மகளிர் உரிமைத் தொகைத் திட்டம் நம் முதலமைச்சர் அவர்கள் கண்டிப்பாகக் கொடுப்பார்.

இப்படி நம் அரசு தமிழ்நாட்டையும், தமிழ்நாட்டு மக்களின் வளர்ச்சியையும் அடுத்த கட்டத்துக்கு எடுத்துக்கொண்டு போகிற பல திட்டங்களைத் தினந்தோறும் செயல்படுத்திக்கொண்டு இருக்கிறது.

### மகளிர் முன்னேற்றம்

நம் முதலமைச்சர் அவர்கள் செயல்படுத்தி இருக்கின்ற இந்தத் திட்டங்களின் காரணத்தால், இன்றைக்கு நம் தமிழ்நாடு அரசு மாநில வறுமை ஒழிப்பு, மகளிர் முன்னேற்றம், தரமான கல்வி, சுகாதாரம் உள்ளிட்ட 13 துறைகளில் இந்தியாவிலேயே நம்பர்1 இடத்தில் இருக்கிறது. இதைத் துணை முதலமைச்சராகச் சொல்லவில்லை, ஒன்றிய அரசின் `நிதி ஆயோக்' அமைப்பே புள்ளிவிவரத்துடன் சொல்லி இருக்கிறது. இந்தியாவில் மொத்தமாகப் பணிக்குச் செல்லும் பெண்களில் 42 சதவிகிதம் தமிழ்நாட்டைச் சேர்ந்த மகளிர்தான். இது இந்தியாவிலேயே முதலிடம்.

இந்தியாவில் மட்டுமில்லை, வெளிநாடுகளில் இருந்தும், நம் அரசின் சாதனைகளுக்குத் தொடர்ந்து பாராட்டுகளும், வாழ்த்துகளும் குவிந்து வருகின்றன. 2 நாட்களுக்கு முன்புகூட, நம் கழக அரசின் 'மக்களைத் தேடி மருத்துவம்' என்ற திட்டத்துக்கு ஐ.நா சபையின் யுனைடெட் நேஷன்ஸ் இன்டர்ஏஜென்சிடாஸ்க்ஃபோர்ஸ் விருது (United Nations Inter Agency Task Force Award) என்ற உயரிய விருது நம் `மக்களைத் தேடி மருத்துவம்' திட்டத்திற்கு வழங்கப்பட்டு இருக்கிறது.

மக்களைத் தேடி மருத்துவம் மட்டுமில்லை, மக்களைத் தேடி நிர்வாகம் என்ற உயர்ந்த லட்சியத்துடன் எண்ணத்துடன்தான் இந்த நிகழ்ச்சியும் இங்கு சிறப்பாக நடைபெறுகிறது. நம் திராவிட மாடல் அரசின் சாதனைகளில் ஒன்றாக, உங்களுக்கு எல்லாம் இன்றைக்கு வீட்டுமனைக்கான பட்டாக்கள் வழங்கப்படுகிறது.

### எடுத்துச் சொல்லுங்கள்

நீங்கள் எல்லோரும் கழக அரசின் திட்டங்களின் பயனாளிகள் மட்டுமில்லை. இந்த அரசுத் திட்டங்களின் பங்கேற்பாளர்கள். திராவிட மாடல் அரசின் சாதனைத் திட்டங்களை எல்லாம் நீங்கள் 4 பேருக்கு, உங்கள் உற்றார் உறவினர்களுக்கு, நண்பர்களுக்கு எடுத்துச் சொல்ல வேண்டும். இந்த அரசின் பிராண்ட் அம்பாசிடர்களாக நீங்கள் அத்தனைப்பேரும் இருக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்த நேரத்தில், பட்டாக்களைத் தயார் செய்ய இரவு, பகல் பார்க்காமல் உழைத்துக் கொண்டிருக்கும் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், சிறப்புத் திட்டச் செயலாக்கத்துறையின் செயலாளர் டேரேஸ் அகமது ஐ.ஏ.எஸ் அவர்கள், பட்டா வழங்குவதில் உள்ள சிக்கல்களை தீர்ப்பதற்காக அமைக்கப்பட்ட குழுவினர், அமைச்சர் அண்ணன் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன் மற்றும் அக்குழுவின் சிறப்பு அதிகாரி மதுசூதன ரெட்டி ஐ.ஏ.எஸ் அவர்கள், மாவட்ட ஆட்சியர் மற்றும் அதிகாரிகள், அலுவலர்கள் அனைவருக்கும் என்னுடைய பாராட்டுகளையும், நன்றியையும், வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

வீட்டுமனை பட்டா பெற்ற அத்தனை பேருக்கும் என் அன்பையும், வாழ்த்தையும் மீண்டும் ஒரு முறை தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வாறுதுணைமுதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

### பங்கேற்றவர்கள்

அமைச்சர்கள் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன், சா.மு.நாசர், சட்டமன்ற உறுப்பினர்கள் கிருஷ்ணசாமி, மாதவரம் சுதர்சனம், வி.ஜி.ராஜேந்திரன், சந்திரன், டி.ஜெ.கோவிந்தராஜன், காரப்பாக்கம் கணபதி, துரை.சந்திரசேகரன், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறையின் அரசு முதன்மைச் செயலாளர் அமுதா ஐ.ஏ.எஸ்., சிறப்புத் திட்ட செயலாக்கத் துறையின் அரசுச் செயலாளர் டேரஸ் அகமது ஐ.ஏ.எஸ்., நில நிர்வாக ஆணையர் கே.எஸ்.பழனிச்சாமி ஐ.ஏ.எஸ்., நில அளவை மற்றும் நிலவரித் திட்ட இயக்குநர் மதுசூதனன் ரெட்டி ஐ.ஏ.எஸ்., மாவட்ட ஆட்சித் தலைவர் பிரபுசங்கர் ஐ.ஏ.எஸ்., மாநகரக் காவல் ஆணையாளர் சங்கர் ஐ.பி.எஸ்., ஆவடி மாநகர மேயர் உதயகுமார், துணை மேயர் சூர்யகுமார், மாவட்ட ஊராட்சிக்குழுத் தலைவர் உமா மகேஸ்வரி, துணைத் தலைவர் தேசிங்கு, வீரமணி, ஆவடி மாநகராட்சி ஆணையர் கந்தசாமி ஐ.ஏ.எஸ்., மாவட்ட வருவாய் அலுவலர் ராஜ்குமார், ஒன்றியக்குழு உறுப்பினர் பிரபு உள்பட அரசு அதிகாரிகள், உள்ளாட்சிப் பிரதிநிதிகள் உள்பட பயனாளிகள் பலரும் கலந்து கொண்டனர்.